## தமிழ்நாட்டு மக்கள் அனைவரது உள்ளங்களிலும் எங்கள் தலைவர் இருக்கிறார்!

# திராவிட மாடல் ஆட்சியின் சிறப்புகளை வட மாநிலங்களுக்கும் உணர்த்தியவர் எங்கள் தலைவர்!

## சட்டப் பேரவையில் எஸ்.ரகுபதி பேச்சு!

சென்னை, ஆக. 12 -

சட்டப் பேரவையில் - நிதி மற்றும் வேளாண் துறை நிதி நிலை அறிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய திருமயம் தொகுதி கழக உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, “தமிழ்நாட்டு மக்கள் அனைவரது உள்ளங்களிலும் வாழ்கிறார், எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்” அவர்கள் என்று குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் எஸ்.ரகுபதி பேசியதாவது: -

அன்னைத் தமிழாம் நம்முடைய தமிழ் மொழிக்கு செம்மொழி என்கின்ற அந்த அந்தஸ்தைப் பெற்றுத் தந்து, இயல், இசை, நாடகம் என்கின்ற முத்தமிழோடு நான்காம் தமிழாக கணினித் தமிழைத் தந்து தமிழ்நாட்டு இளைஞர்களுக்கெல்லாம், ஒரு சிறந்த எதிர்காலத்தை கணினிமயமாக்கல் மூலமாக உருவாக்கித் தந்த எங்களுடைய அன்பு தெய்வம் தலைவர் கலைஞருடைய நினைவு நாளில் இன்றைக்கு நாங்கள் முதலில் அவரை வணங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கையில் ஜெப மாலையோடு வந்து நிதிநிலை அறிக்கையை வாசித்தார்கள். நம்முடைய வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பதி ஏழுமலையானை தரிசித்துவிட்டு லட்டு, புளியோதரையோடு வந்து இங்கு வேளாண்மைத் துறையினுடைய அறிக்கையை வாசித்தார்கள். ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என்கின்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் வழியிலே வந்தவர்கள் நாங்கள். எனவே, என்றைக்குமே திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட மாடல் ஆட்சியை முன்னெடுத்துச் செல்கிற ஒரு இயக்கம். அதனுடைய தலைவர் தான், இன்றைக்கு தமிழகத்திற்கு மட்டுமின்றி இந்தியா முழுவதும் விந்தியத்திற்கு வடக்கேயும் உள்ளவர்கள் தெரிந்துகொள்கின்ற வண்ணம் திராவிட மாடல் ஆட்சியை இன்றைக்கு வடநாட்டிற்கும் உணர்த்தியவர் எங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தலைவர் எங்கே என்று கேட்கின்றவர்களுக்கெல்லாம் என்னுடைய உரையில் பல்வேறு விளக்கங்கள்மூலம் எங்கெங்கெல்லாம் அவர் இருக்கின்றார் என்பதை நான் விளக்க இருக்கின்றேன். அந்த ஈடு இணையற்ற தலைவருடைய புதல்வராக, வேங்கையின் மைந்தனாக, எதற்கும் அஞ்சாத சிங்கமாக, எது வந்தாலும் துணிந்துநின்று போராடக்கூடிய வல்லமை பெற்றவராக (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இளங்கலைஞர் என்று இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களாலே புகழப்படுகிற எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, எங்களுடைய அன்புக்குரிய சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், கொறடா, துணைக் கொறடா, முன்னாள் அமைச்சர் பெருமக்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் முதலமைச்சர்கள் இருவர் இங்கே இருக்கிறார்கள்.

எனவே, முன்னாள் முதலமைச்சர்களுக்கும், அனைவருக்கும் முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் இந்த உரையில் பேசுவதற்கான வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்திருக்கின்ற நம்முடைய சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்கள் என்னுடைய நெடுநாளைய நண்பர் ஆவார். அவர்களை இந்த உச்சத்தில் உட்கார வைத்து அழகு பார்க்க வேண்டுமென்று நாங்கள் அன்றைக்கே நினைத்திருந்தோம். இன்றைக்கு அவருக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. உட்கார்ந்திருக்கிறார்கள். வாழ்த்துகிறோம்.

நிதிநிலை அறிக்கைக்குள் செல்வதற்கு முன்னால், ஒரு சில கருத்துகளை நான் இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. உதாரணமாக மாநில தகவல் ஆணையம் என்று ஒன்று இருக்கிறது. அந்த மாநில தகவல் ஆணையத்திடம் சில கேள்விகளை சிலர் கேட்டிருக்கிறார்கள். அதன் நகல்கூட என்னிடம் தரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மாநில தகவல் ஆணையத்தின் உறுப்பினர்கள் நியமிக்கப்படாததால் இன்னும் தகவல்கள் அளிக்கப்படவில்லை என்று சொல்கிறீர்கள். நாங்கள் எதிலும் வெளிப்படையானவர்கள்; ஒளிவு மறைவு கிடையாது; இப்படிச் சொல்கின்ற இந்த அரசு, இன்னும் ஏன் அவர்களை நியமிக்கவில்லை? பதில் தரவில்லை? தங்களுக்கு வேண்டியவர்களையெல்லாம் பல்வேறு பொறுப்புகளில் நியமித்திருக்கிறீர்கள், அது குறித்து தகவல்களைக் கேட்கின்றபோது, தகவல் ஆணையத்தில் இன்னும் உரிய ஆணையர்கள் நியமிக்கப்படவில்லை என்கிற தகவலைத் தருகிறார்கள்; எனவே, விரைந்து நியமித்து, மாநில தகவல் ஆணையம் செயல்பட வேண்டும்; அதன்மூலமாக மக்கள் பல செய்திகளைத் தெரிந்துகொள்ள இந்த அரசு வெளிப்படையான உண்மையான அரசாக, போலித்தனம் இல்லாத அரசாக செயல்படுகிறோம் என சொல்கிற நீங்கள் நிச்சயம் அதைச் செய்ய வேண்டுமென்று முதலில் நாங்கள் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்ததாக ஒரு ஆங்கில பத்திரிகையில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. திரு. பிரவீன் சக்ரவர்த்தி என்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களது தலைமையில் காங்கிரஸ் கட்சியில் *All India Professionals’ Congress* மற்றும் *Data Analytics wing* ஆகிய அமைப்புகள் செயல்படுவதாகவும், இதன்வாயிலாக பிரவீன் சக்ரவர்த்தி அவர்கள் தமிழ்நாடு அரசின் கொள்கைகளை வடிவமைப்பதிலும், *Montek Singh Ahluwalia* போன்றவர் தலைமையிலான *Revenue Augmentation Committee* அமைப்பதிலும், ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்குவதாக அந்த ஆங்கிலப் பத்திரிகை செய்தி தெரிவித்திருக்கிறது. அது உண்மையா? அப்படியொரு *Committee* இருக்கிறதா? அவருக்கென்று தனியாக ஒரு அதிகாரத்தை இந்த அரசு தந்திருக்கிறதா?

பத்திரிகைச் செய்திகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு மட்டுமல்ல, பல்வேறு தகவல்கள் இன்றைக்கு வந்த காரணத்தினால் அதைச் சொன்னோம்.

### வீண் செலவு குறையும் என்பது எதன் அடிப்படையில்!

அடுத்ததாக நம்முடைய நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் 8 மற்றும் 9-வது பக்கத்தில் ஒன்று சொல்லியிருக்கிறார். அதாவது, வளர்ந்துவரும் இளம் *contractors*-க்கு எல்லாம் நாங்கள் வாய்ப்பு கொடுப்பதற்காக பல்வேறு விதிமுறைகளை யெல்லாம் தளர்த்தியிருக்கின்றோம். அது அவர்களுக்கெல்லாம் கிடைக்கும். *Tender*-ல் ஆரோக்கியமான போட்டி உருவாகும். அதனால், அரசின் வீண் செலவுகள் குறையும். ஆரோக்கியமான போட்டி உருவாகின்றபோது வீண்செலவு குறையும் என்று சொல்வது எந்த அடிப்படையில் என்பது எங்களுக்குத் தெரியவில்லை.



அடுத்தது, கசிவு, கசிவு என்று இதில் நிறைய இடங்களில் இருக்கிறது. கட்டடங்களில் எங்கேயாவது கசிவு இருந்தால் சொல்வார்கள். என்னவோ புதிய வார்த்தையை கண்டுபிடித்திருக்கிறீர்கள். கசிவு, கசிவுநீர் கொட்டின குட்டைகள் என்று சொல்லித்தான் நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். கசிவு என்ற புதிய வார்த்தையைக் கொண்டு வந்திருக்கிற உங்களுக்கு என்ன சொல்வது? எதையும் சொல்ல முடியாது. அடுத்ததாக எந்த *tender*-யும் நீங்கள் இன்னும் வைக்கவில்லை.

அதை நாங்கள் வரவேற்கிறோம். இப்போது *bill* வாங்குவதற்கு ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று பாருங்கள். அமைச்சர் அவர்களே, *Police Department* உங்கள் கையில்தான் உள்ளது. நீர்வளத் துறையில் 3 சதவிகிதம் கொடுத்தால்தான் *bill* என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுப் பணித் துறையில் 5 சதவிகிதம் கொடுத்தால்தான் *bill* என்று சொல்கிறார்கள்.

‘மக்களின் வரிப் பணத்தில் இருந்து ஒரு பைசாவும் தொடமாட்டோம், தொட விடமாட்டோம், தொட்டால் விடமாட்டோம், இதற்கு முன் தொட்டவர்களையும் விடமாட்டோம்’ என்று நிதிநிலை அறிக்கையில் நீங்கள்தான் சொல்லியிருக்கிறீர்கள். சனிக்கிழமை அன்று பனையூரில் நடக்கும் அந்த வாரச் சந்தைகளை போய் பார்த்தீர்கள் என்றால், இதிலே கொண்டிருக்கிறார்கள். இது உங்களுடைய நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. (குறுக்கீடு)

நீங்கள் தொட்டால் விடமாட்டேன் என்று சொல்வதெல்லாம் *subject* தானே! அந்த *subject*—நீங்கள் கொடுத்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலிருந்து பேசுகிறேன். அதிலிருந்து பேசக்கூடாது என்று சொன்னால் நான் என்ன செய்ய முடியும்? அதை வைத்து பேசுகிறேன். (குறுக்கீடு) சரி, *right* விட்டுவிடுவோம்.

அதாவது, எங்களுடைய ஆட்சிக் காலத்தில், எங்களுடைய தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், சாலை விபத்திலே காயமடைந்தவர்களுக்கு உடனடியாக, வைத்தியம் பார்த்து காப்பாற்ற வேண்டும். ஏனென்றால், அதற்கு முன்னர் யாரும் கவனிக்க மாட்டார்கள். பார்த்தால், *police*-ல் *FIR* போட்டு, நம்மை சாட்சிக்கு கூப்பிட்டுவிடுவார்கள் என்று யாரும் பார்க்க மாட்டார்கள். எனவே, 48 மணி நேரத்திற்குள், “இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48” என்கின்ற திட்டத்தைக் கொண்டுவந்து, உடனடியாக அவர்களை மருத்துவமனைகளில் கொண்டு சென்று சேர்த்து, அவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை—காயமடைந்தவர் ராஜஸ்தான் மாநிலத்தை சார்ந்தவரோ, கேரள மாநிலத்தைச் சார்ந்தவரோ அல்லது கர்நாடக மாநிலத்தைச் சார்ந்தவரோ, எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்கள் என்றெல்லாம் பார்க்கவில்லை. உயிரைக் காப்பாற்ற வேண்டும். தமிழ்நாட்டிலே விபத்தினால் ஓர் உயிர் போகக்கூடாது என்கின்ற அந்த சீரிய நோக்கத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு இலட்சம் ரூபாயை உடனடியாக (மேசையைத் தட்டும் ஒலி) யார் பணத்தையும், யாரையும் எதிர்பார்க்க வேண்டாம். அந்தக் காயமடைந்தவரின் தாய் வருகிறாரா, தந்தை வருகிறாரா, மகன் வருகிறாரா, மகள் வருகிறாரா என்றெல்லாம் பார்க்க வேண்டாம். நீ உடனடியாக அவர்களுக்கான வைத்தியத்தைச் செய்; அதற்கான பணத்தை இந்த அரசு தரும் என்று தந்தவர் எங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இன்றைக்கு அந்தத் திட்டத்தைப் பற்றி இதில் எதுவும் குறிப்பிடவில்லை. விபத்துக் காப்பீட்டுத் திட்டம் என்று போட்டிருக்கிறீர்களே தவிர, *road accident*-களில் இரண்டு இலட்சம் ரூபாய், எந்தக் கேள்வியுமில்லை. *FIR* இருந்தால் போதுமானது. எந்த *cards*-ம், எதுவும் தேவையில்லை. அந்தத் திட்டம் இருக்கின்றதா என்பதை நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய மானியக் கோரிக்கையில்கூட சொல்லலாம்.

குறிப்பிடாததால்தான் அதைப் பற்றி பேச வேண்டியதாகிவிட்டது. அடுத்தது, ‘வெற்றி 150 நாட்கள்’. இந்த அரசு, ஒன்றிய அரசிடம் *surrender* ஆகிவிட்டது என்பதற்கான எடுத்துக்காட்டான முதல் திட்டம், அந்தத் திட்டம். *VB-G RAM G*. 40 சதவிகிதம் மாநில அரசு நிதி; 60 சதவிகிதம் மத்திய அரசு நிதி. அந்தத் திட்டம் கிராமப்புற வேலைவாய்ப்புகளுக்கானது. நாங்கள் வேண்டாமென்று எதிர்த்தோம். அதனால் எங்களுக்கு 3,591 கோடி ரூபாய் பணம் வரவில்லை. பணம் வரவில்லை என்றாலும்கூட, அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தோம். ஆனால், எந்தக் காலத்திலும் நாங்கள் உங்களுக்கு பணிய மாட்டோம் என்று சொல்லிவிட்டு, நாங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்தான் வேண்டுமென்று வலியுறுத்தினோம். *VB-G RAM G* திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், இன்றைக்கு ஒன்றிய அரசுக்கு—சத்தமேயில்லாமல் செய்து விடுவீர்கள். அதுதான் உங்களுடைய சாதனை! எப்படி *election*-ல் சத்தமே இல்லாமல் வந்தீர்களோ; அதுபோல சத்தமே இல்லாமல் *surrender* ஆகிவிடுகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### பட்ஜெட்டில் இருக்கும் நிறைக் குறைகளை சொல்வதுதான் எங்களுடைய கடமை!

முன்னாள் அமைச்சர் நம்முடைய தங்கம் தென்னரசு அவர்கள் பேசியது போன்றவற்றையெல்லாம் இன்றைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். நான் கொஞ்சம் சத்தமாகப் பேசிவிட்டேன். அதனால், அவருக்கு ஏதோ நான் கோபமாக கொந்தளித்து பேசுவதுபோல் தோன்றியிருக்கிறது. எதிர்க்கட்சி விமர்சித்துதான் ஆகவேண்டும். பட்ஜெட்டை வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருவதற்கு எதற்கு நான் இங்கே வருகிறேன். இதற்காகவா என்னை திருமயம் தொகுதியிலிருந்து மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள்? அரசுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் சொல்ல வேண்டும். பட்ஜெட்டில் என்ன நிறை குறைகள் இருக்கிறது அதை சொல்ல வேண்டும். அதுதான் எங்களுடைய கடமை. அந்தக் கடமையைத்தான் நாங்கள் செய்கின்றோம். நாங்கள் முதலமைச்சரைப் பற்றி தப்பாக சொல்லவில்லையே; மற்ற அமைச்சர்களைதான் சொல்கிறோம். முதலமைச்சர் அவர்கள், உங்களிடம் சொல்லிக்கொண்டேதான் இருக்கிறார், யாரும் லஞ்சம் வாங்கக் கூடாது, எதுவும் பண்ணக்கூடாது என்று; என்பதுதான் எங்களுக்கு வருத்தம். (மேசையைத் தட்டும் ஒலி)

மொத்தமாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் என்னென்ன நிறை குறைகள் என்பதற்கு வந்துவிடுவோம். 2026-2027 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் இருந்த 3,93,272 கோடி ரூபாயிலிருந்து, திருத்திய வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகள், 2026-2027-ல் 4,05,802 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது, நீங்கள் வந்த பிறகு, 12,530 கோடி ரூபாயை உயர்த்தியிருக்கிறீர்கள். நாங்கள் அளித்த வரவு - செலவுத் திட்டத்திற்கும், இப்போது இருக்கக்கூடிய வரவு - செலவுத் திட்டத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் 12,530 கோடி ரூபாய் உயர்வு. ஆனால், இவ்வாறு உயர்த்தியதோடு இல்லாமல், *MGNREGS*-ல் வர வேண்டிய தொகை 3,451 கோடி ரூபாய் *claim* செய்திருக்கிறோம். *Metro Rail second phase*; அதையும் நீங்கள் கேட்டுவிட்டீர்கள். அதை 9,523 கோடி ரூபாய் கடன் வாங்கி கட்டிக்கொண்டிருக்கிறோம். அந்த நிதியையும் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறீர்கள். அந்த வகையில் 12,974 கோடி ரூபாய். இரண்டையும் சேர்த்தால், சுமார் 26,000 கோடி ரூபாய், எங்களுடைய பட்ஜெட்டைவிட தற்போது நீங்கள் கூடுதலாக செலவிற்கு பட்ஜெட் போட்டிருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் குறைவாக செலவு செய்கிறோம்; நாங்கள் செலவைக் குறைத்திருக்கின்றோம் என்று சொல்கிறீர்கள். ஆனால், இங்கு 26,000 கோடி ரூபாய் உங்கள் பட்ஜெட் மூலமாக கூடுதலாக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### விடியல் பயணத்தில் எங்கள் தலைவர் இருக்கிறார்

200 யூனிட் மின்சாரம் குறித்தெல்லாம் யாருக்கும் கிடைக்கவில்லை. மூன்றரை இலட்சம் பேர் மனு கொடுத்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது; பலர் இன்றைக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; யாருக்கும் கிடைக்கவில்லை. நீங்கள் சொன்ன மகளிர் உரிமைத் தொகை, யாருக்கும் கிடைக்கவில்லை. ஆனால், எங்கே இருக்கிறார் எங்களுடைய தலைவர் என்று கேட்டவர்களுக்குச் சொல்கிறோம்; மகளிர் உரிமைத் தொகை வாங்குகிற ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருக்கிறார்; (மேசையைத் தட்டும் ஒலி) புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் ஆகியவற்றின்மூலம் பயனடைந்திருக்கிற பயனாளிகளின் உள்ளத்திலும் இருக்கிறார்; அதேபோல, அரசு நகரப் பேருந்தில் பயணம் செய்பவர்களுடைய விடியல் பயணத்தில் அவர் இருக்கிறார்; விடியலை நீங்கள் எடுத்துவிட்டீர்கள், பரவாயில்லை; தமிழ்நாட்டிற்கு விடியல் எங்களால் மீண்டும் கிடைக்கும்; எனவே, அந்த விடியல் பயணத்தில் அவர் இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

காலை உணவுத் திட்டத்தில் இருக்கிறார்; இவ்வாறு ஒவ்வொரு திட்டங்களாக அடுக்கிக்கொண்டே போகலாம். அதனால், எல்லா வகையிலும், தமிழ்நாட்டு மக்களுடைய இதயங்களிலும் அவரை இருக்கச் செய்திருக்கின்றோம். ஆனால், ஓட்டுப்போடும் அந்த நேரத்தில்தான், சின்னக் குழந்தைகளுக்கு எந்தத் திட்டம் குறித்தும் தெரியாததால், அவர்கள் குறுக்கே புகுந்தனர். ஆனால், நீங்கள் தற்போது அறிவித்துள்ள 812 கோடி ரூபாயில் ‘அண்ணன் சீர்’ நிச்சயமாக கொடுக்க முடியாது. ஏனென்றால், 2022-2023-ல் மட்டும் நாங்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்ட பெண்களுடைய எண்ணிக்கை மட்டும் 1 இலட்சம். எல்லா பெண்களையும் கணக்கிட்டால் நிச்சயமாக 2 இலட்சம், 3 இலட்சம் எண்ணிக்கை வரும். ஒரு சவரன் தங்கம் இன்றைக்கு ரூ.1,05,000/- ஆக உள்ளது. உங்களுடைய அதிர்ஷ்டம் அது ஒரு இலட்சத்திற்கு வரட்டும். பட்டுப் புடவை விலை ரூ.10,000/-க்கு வரட்டும். இவ்வாறு ரூ.1,10,000/-ஐ, ரூ.1,00,000/- ஆக மாற்றினால்கூட அண்ணன் சீர் திட்டத்திற்கு 2,000 கோடி ரூபாய்க்குக் குறையாமல் நிதி வேண்டும். ஆனால், நிதியமைச்சர் அவர்கள் அதற்கு ஒதுக்கியிருப்பதோ 812 கோடி ரூபாய் மட்டும்தான். மிதிவண்டிகள் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் ரூ.3,900/- மதிப்பிலான மிதிவண்டிகள் கொடுத்தோம். *Modern branded cycles* கொடுக்கவுள்ளதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதன் விலை மதிப்பு 8,000 ரூபாய் என்று சொல்கிறார்கள். அந்த 8,000 ரூபாய் மதிப்பிலான சைக்கிள் கொடுத்தீர்களென்றால், அதற்கான செலவுத் தொகையையும் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள். எனவே, நீங்கள் போட்டிருப்பதெல்லாம் அரைகுறையாகத்தான் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) முழுமையடைகின்ற தொகை அதில் ஒதுக்கப்படவில்லை. எனவே, இந்த பட்ஜெட்டில் நீங்கள். . . (குறுக்கீடு)

ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக்கூறுகளினுடைய அடிப்படையில், நீங்கள் கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கைதான். அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் 75 சதவிகிதம் அல்லது மாநில மொத்த உள் நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் 7½ சதவிகிதம், இவற்றில் எது குறைவானதோ அந்த அளவுக்கு கடன் வாங்குதல் அமையப் பெற வேண்டும். அதை எங்களுடைய அரசு மொத்த வருவாய் வரவுகளில் 23.46 சதவிகிதமாகவும், மாநிலத்தின் மொத்த உள் நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் 1.86 தான் நாங்கள் வாங்கியிருக்கிறோம். அதே அளவிற்கு நீங்கள் *maintain* செய்து காண்பித்தாலே போதும். புதிதாக நாங்கள் ஏதோ கடன் எல்லாம் வாங்கி வைத்துவிட்டோம் என்று சொல்கிறீர்கள்.

அடுத்தது, நாங்கள் *GDP growth rate* இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திலே 11.19 சதவிகிதம் கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் 11.19 முடியாது. ஆனால், 10 சதவிகிதமாவது கொண்டு வர முயற்சி செய்யுங்கள். அப்போது தான் தமிழ்நாடு வளரும்.

இந்த நேரத்தில் எனக்குப் பேசுவதற்கான வாய்ப்பினை அளித்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னை மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்து, சட்டமன்றத்திலே பேசுவதற்கான வாய்ப்பையும், தொகுதிக் குறைகளையும், மக்களுக்கான குறைகளையும் சொல்லக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற, எந்நாளும் என் நெஞ்சில் இருக்கக்கூடிய திருமயம் தொகுதி மக்களுக்கும், என்றைக்கும் நான் உழைக்கின்ற புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை மனுவாக பேரவைத் தலைவர் அவர்களிடம் தந்துவிடுகிறேன்.

இவ்வாறு சட்டப்பேரவையில் எஸ்.ரகுபதி பேசினார்.



கோவை வடக்கு மாவட்டம் இடையபாளையம் அறிஞர் அண்ணா நகரில், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் எட்டாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் திருமதி மாலதி, 34 வது வட்டக் கழக அவைத்தலைவர் நாகராஜன், 35 வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியன், 35 வது வட்டக் கழக துணை செயலாளர் ஜெயசீலன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் பி.எஃப். காலனி நலச்சங்க தலைவர் ராமச்சந்திரன், அண்ணா நகர் தீபக் ராமதாஸ், பெட்டிக்கடை சசிகுமார், ஜூஸ் விற்பனையாளர் கதிரவன், ட்ராவல்ஸ் சீனிவாசன், மகளிர் அணியை சார்ந்த திருமதி நளாயினி, திருமதி ராஜேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நரசிங்கபுரம் நகர தி.மு.க. சார்பில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு நகரச் செயலாளர் என்.பி.வேல்முருகன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் நகர மன்றத் தலைவர் அலெக்சாண்டர், துணைச் செயலாளர்கள் பிரகாஷ், பரமசிவம், இளவரசு, விஜயகுமார், பாண்டியன், செந்தில், அசோகன், தில்லை செல்வம், கதிர்வேல், வெங்கடேஷ், மனோகர், புலித்தேவன், தியாகராஜன் மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.